


நல்லவே எண்ணல் வேண்டும்..,

எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VOLUME : 01 | ISSUE: 102 | 07.10.2025 | TUESDAY | PURATTASI : 21 | PRICE : RS.5/- |
| மலர் : 01 | இதழ் : 102 | 07.10.2025 | செவ்வாய்கிழமை | புரட்டாசி : 21 | விலை : ரூ.5/– |

3 திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் தீ: பெட்டியில் இருந்து குதித்த பயணிகள்

4 தீர்ப்பு வழங்கியதற்காகவே மோசமாக விமர்சிக்கின்றனர்: உயர்நீதிமன்ற நீதிபதி

2 "ஒரு கட்சி என்றால் தைரியம் இருக்க வேண்டும்" தவெக மீது பிரேமலதா கடும் விமர்சனம்

# அரசு பொதுத்துறை நிறுவன பணியாளர்களுக்கு 20% வரை போனஸ் : முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை: அக்.7-

அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 'C' மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை போனஸ் வழங்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் 2024ஞ்25 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையை வழங்க முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

திருத்தப்பட்ட போனஸ் சட்டம், 2015 படி, மிகை ஊதியம் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ.21,000 எனவும், இதன்படி மிகை ஊதியம் கணக்கிட மாதாந்திர சம்பள உச்சவரம்பு ரூ.7,000 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உச்சவரம்பை தளர்த்தி, அனைத்து 'C' மற்றும் 'D' பிரிவு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் 2024 25ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை கீழ்வருமாறு வழங்கப்படும்:




1. லாபம் ஈட்டியுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 'C' மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கப்படக்கூடிய உபரி தொகையை கணக்கில் கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

2. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியும் தகுதியுடைய 'C' மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

3. ஒதுக்கக்கூடிய உபரி தொகை இல்லாத பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் "C" மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றில் பணிபுரியும் தகுதியுடைய 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை வழங்கப்படும்.

5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ3,000/ கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இதனால், மிகை ஊதியம் பெறத் தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ரூ.8400/ மற்றும் அதிகபட்சம் ரூ.16800/ வரை பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2,69,439 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.376.01 கோடி மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இது தவிர, பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

அரசின் இந்த நடவடிக்கை, பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மேலும் ஊக்கத்துடன் செயல்படவும், எதிர்வரும் விழாக்காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் வழிவகை செய்யும்.



■ திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

## திருப்பூர் மாநகர மாவட்ட மகிலா காங்கிரஸ் உறுப்பினர்கள் சேர்க்கை ஆலோசனைக் கூட்டம்

திருப்பூர். அக்.06

தமிழக மகிளா காங்கிரஸ் மாநில தலைவி. ஹசினா சையத் ஆலோசனையின்படி. மாநகர மாவட்ட தலைவர் ஆர் கிருஷ்ணன் அறிவுறுத்தலின்படி திருப்பூர் மாநகர மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி V.ஆஷா தலைமையில் பெருமாநல்லூர் சாலை பாண்டியன் நகரில் இந்திய தேசிய காங்கிரஸ் ராஜீவ் பவன்யில் ஆலோசனை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட தலைவிக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



இக்கூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கை சம்பந்தமாக திருப்பூர் மாநகரில் பல்வேறு இடங்களில் வசிக்கும் பொதுமக்களிடம் ஒன்றிய அரசு ஓட்டு திருட்டை கண்டித்து பொதுமக்களிடம் விளக்கிக் கூறி மாபெரும் உறுப்பினர் சேர்க்கை மாநகர் மாவட்ட மகளிர்நிர்வாகிகள் இடம் அதிகப்படுத்தக் கோரி ஆலோசனைக் கூட்டம் பொதுமக்களிடம் கையெழுத்து வாங்கப்பட்டது.

துணைத் தலைவி சம்சாத் பேகம், பொருளாளர் சுலோச்சனா, பொதுச் செயலாளர்கள் தனபாக்கியம், சுகந்தி, செயலாளர்கள் அப்ரோஸ்ஜஹான் பேகம், ராதா, கமலம், சமூக ஊடகப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் D.ரெபேக்கா டார்த்தி திவ்யாளினி, வார்டு தலைவிகள் சாந்தி, குருவு, வள்ளிநாயகம், சரஸ்வதி, பேபி, ஆகியோர் அனைத்து மகளிரும் கலந்து கொண்டனர்.

## தேசிய சட்ட உரிமை பாதுகாப்பு கவுன்சிலில் 100க்கும் மேற்பட்டவர்கள் இணைந்தனர்

உடுமலை சின்ன வீரப்பம்பட்டி.06

தேசிய சட்ட உரிமை மக்கள் பாதுகாப்பு கவுன்சில் திருப்பூர் மாவட்டம் உடுமலை சின்ன வீராம்பட்டியில் உடுமலை தொகுதி தலைவர் தாயம்மாள் ஏற்பாட்டில் புதிய உறுப்பினர்கள் 100க்கும் மேற்பட்டவர்கள் தேசிய சட்ட உரிமை பாதுகாப்பு கவுன் சிலில் இணைந்தனர்.

இதில் பொது மக்களுடைய குறைகள் மனுவாகபெற்று கொள்ளப்பட்டது அதை பரிசீலனை செய்து நிறைவேற்றித் தருமாறு உறுதி அளித்தும்,



ஆண் பெண் இருபாலருக்குமான இலவச சிறுதொழில் பயிற்சி, சட்ட விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

இதில் தேசிய சட்ட உரிமை மக்கள் பாதுகாப்பு தலைவர் சேர்மன் முனைவர் ஏ.ரஃபிக் தேசிய பொதுச் செயலாளர் சேவாரத்னா விஜயலட்சுமி தேசிய செயலாளர் யுவராஜ் ,மாநில துணைத்தலைவர் சித்ரா ,மாநில செயலாளர் கோபாலகிருஷ்ணன் ,மாநில மகளிர் அணி செயலாளர் உமைபா, நாமக்கல் மாவட்ட தலைவர் குணசேகரன் மகளிர் அணி தலைவி கவிதா கோவை மாவட்டம் மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் திருப்பூர் மாவட்ட மகளிர் அணி தலைவர் வித்யா , உடுமலை தொகுதி ஆலோசகர் அம்சவேணி, ஒருங்கிணைப்பாளர் பத்மாவதி, அமுதா காயத்ரி , உடுமலை தொகுதி பஞ்சாயத்து தலைவர் உடுமலை தொகுதி முன்னாள் கவுன்சிலர் சின்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## தமிழ்நாடு முக்குலத்தோர் சங்கத்தின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மற்றும் புதிய நிர்வாகிகள் தேர்வு

அலங்காநல்லூர், அக்.07.

மதுரை மாவட்டம் பாலமேடு தேவர் மகாலில் தமிழ்நாடு முக்குலத்தோர் நல சங்கத்தின் உயர்மட்ட குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

அதில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. சங்கத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டு புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றி மூன்று வருடங்களுக்கு

ஒரு முறை சுழற்சி முறையில் தேவைப்பட்டால் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

புதிய பதவிகளாக நிறுவனராக STM. செந்தில்குமார், தலைவராக வீரபத்திரன், பொதுச் செயலாளராக கொற்றவை ஆதிமுத்துக்குமார், துணைத் தலைவராக கார்த்திகேயன், பொருளாளராக குமரேசன், கௌரவ ஆலோசகராக கார்த்திகேயன், முக்கிய செயல்பாடுகளை தேர்ந்தெடுக்கும் நிர்வாகிகள், மூன்று செயலாளர்கள், மூன்று இணைத் தலைவர்கள், மூன்று துணைச் செயலாளர்கள், முக்குலத்தோர் உட்பிரிவில் சமமாக பொறுப்பு கொடுக்கப்பட்டது.

கூட்டத்தில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு முக்குலத்தோர் நல சங்கம் உயர்மட்ட குழு - பொதுக்குழு நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

புதியநிர்வாகிகளை தேர்ந்தெடுத்ததற்கு அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு முக்குலத்தோர் நல சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## திமுக அரசை கண்டித்து சிறை நிரப்பும் போராட்டம் நடத்த திட்டம் : தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் அறிவிப்பு

திருச்சி,அக்.07

திருச்சி மன்னார்புரம் பகுதியில் தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டம் திருச்சி மாவட்ட தலைவர் காமராஜர் தலைமையில் நடைபெற்றது. இதில் திருச்சி மாவட்டம் முழுவதும் உள்ள 300க்கும் பணியாளர்கள் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.மேலும் ஊதியஉயர்வு வெளிப்படைத்தன்மையுடன் சங்கங்களை வகைப்பாடு செய்யாமல் லாப நட்டங்களை கணக்கில் கொள்ளாமல் 31.03.2018 ஆம் தேதி ஊதிய ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு பணியாளர்கள் 31.03.2023 ஆம் தேதி பெற்று வந்த சம்பளத்தின் மீது 20 % ஊதிய உயர்வு அனைவருக்கும் எவ்வித நிபந்தனைகளும் இன்றி அனுமதிக்கப்பட வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு பின்னர் ஓய்வு பெற்றுள்ள பணியாளர்கள் அனைவருக்கும் உடனடியாக ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். தவணைத் தவறிய நகைக்கடன் உங்கள் ஏலம் விடப்பட்டதில் ஏற்பட்ட நட்டத்தை செயலாளர் தலையில் சுமத்தி ஓய்வு கால நிதி பயன்களில் பிடித்தம் செய்யப்பட்டு வருவது கைவிடப்படுவதுடன் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகையை திரும்ப வழங்கப்பட வேண்டும். தேவையற்ற இடங்களில் முதல்வர் மருந்தகம் ஏற்படுத்தி தினசரி ரூ.1000 க்கு விற்பனை செய்து ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் நடவடிக்கையை கைவிடப்பட வேண்டும். மகளிர் பணி புரியும் இடங்களில் அவசியம் கழிவறை வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். விற்பனையாளர்களாக பணியில் சேர்பவர்களுக்கு தொகுப்பூதியம் இல்லாமல் காலம் வரை ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும், உள்ளிட்ட 25 கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (நேற்று) முதல் காலை வரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் திருச்சி மாவட்ட தலைவர் காமராஜ் பேசும் போது:

தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கம் சார்பில் தொடர்ந்து பலமுறை மாநில அரசுக்கு கோரிக்கைகளை முன் வைத்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை, தொடர்ந்து பணியாளர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் பணிபுரியக்கூடிய இடங்களில் அவர்களுக்கு தேவையான எந்த விதமான அடிப்படை வசதியும் ஏற்படுத்தி தரவில்லை.. உள்ளிட்ட 25 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பலமுறை போராட்டம் நடத்தியும் தமிழ்நாடு அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம் சாட்டினார். ஆகையால் இன்று முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் இன்னும் இரண்டு நாட்களுக்குள் மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அடுத்த கட்டமாக மாநிலம் தழுவிய சாலை மறியல் போராட்டம் மற்றும் சிறை நிரப்பும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்தார்.

# "ஒரு கட்சி என்றால் தைரியம் இருக்க வேண்டும்" தவெக மீது பிரேமலதா கடும் விமர்சனம்



கிருஷ்ணகிரி, அக்.07-

ஒரு கட்சி என்றால் தைரியம் இருக்க வேண்டும். வீரம் இருக்க வேண்டும். நம்மால் ஒரு குடும்பத்துக்கு பாதிப்பு என்றால் முதல் ஆளாக நிற்க வேண்டும். விஜய் குறித்த நேரத்தில் அங்கு வரவே இல்லை. இது அவர் செய்த முதல் தவறு என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் விமர்சித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இதுகுறித்து பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது: "தவெக நிர்வாகிகள் தலைமறைவாக இருப்பதாக சொல்கிறார்கள். தலைக்கு கத்தியா வரப்போகிறது? தூக்கிலா போடப் போகிறார்கள்? ஒரு கட்சி என்றால் தைரியம் இருக்க வேண்டும். வீரம் இருக்க வேண்டும். நம்மால் ஒரு குடும்பத்துக்கு பாதிப்பு என்றால் முதல் ஆளாக நிற்க வேண்டும். விஜய் குறித்த நேரத்தில் அங்கு வரவே இல்லை. இது அவர் செய்த முதல் தவறு. உங்களை பார்க்கத்தானே குழந்தைகளை வைத்துக் கொண்டு தாய்மார்கள் உட்பட அனைவரும் காலை முதல் சாலையில் நிற்கிறார்கள். அந்த பொறுப்பு வேண்டாமா?

7 மணிக்கு நிகழ்ச்சி என்றால் 7 மணிக்கு அங்கு இருக்க வேண்டும். நீங்கள் வீட்டில் இருந்தே தனி விமானத்தில்தான் வருகிறீர்கள். விஜயகாந்த் 150 படங்கள் நடித்துள்ளார். படப்பிடிப்புக்கு அவர்தான் மேக்கப் உடன் முதல் ஆளாக வந்து நிற்பார். இந்த கடமை உணர்வை தவறுவிட்டிருக்கிறார் விஜய். அவர் படப்பிடிப்புக்கு சரியாக போய்விடுவார். ஆனால் அரசியலுக்கு இப்போதுதான் வந்திருக்கிறார். ஏன் அரசாங்கத்தையும், காவல்துறையும் நம்பி நீங்கள் போகிறீர்கள்? உங்களை நம்பி வந்த மக்களுக்கு நீங்கள் என்ன பாதுகாப்பு கொடுத்தீர்கள்? உங்களை நம்பி வரும் தொண்டர்களுக்கு தண்ணீர், உணவு கொடுக்க வேண்டாமா? இது அவர் செய்த அடுத்த தவறு. ஏதோ கூண்டுக்குள் புகுந்து கொள்வதை போல பேருந்துக்குள்ளேயே இருக்கிறார். உங்கள் அண்ணன் விஜயகாந்த் செய்த விஷயங்களை கற்றுக் கொண்டு செய்யுங்கள் விஜய்" இவ்வாறு பிரேமலதா தெரிவித்தார்.

# கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையத்தில் புறநகர பேருந்துகள் சேவை தொடக்கம்



கரூர், அக்.07-

கரூர் மாவட்டம் திருமாநிலையூரில் கட்டப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதி புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இன்று (அக்.6ம் தேதி) காலை 6 மணி முதல் பேருந்துகள் சேவை தொடங்கியது.

கரூர் கோவை சாலை மற்றும் மேற்கு பிரதட்சணம் சாலை சந்திப்பில் முத்து குமாரசாமி பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. ஏ கிரேடு அந்தஸ்து கொண்ட இப்பேருந்து நிலையம் 1987ம் ஆண்டு நவம்.23ம் தேதி திறக்கப்பட்டது.

இங்கு சுமார் 70க்கும் மேற்பட்ட பேருந்துகள் நிறுத்த முடியும். நாள்தோறும் நூற்றுக்கணக்கான பேருந்துகளும், ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர். நகரின் மையப் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தில போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டதால் 2002ம் ஆண்டு முதல் புதிய பேருந்து நிலைய கோரிக்கை எழுந்து வந்தது. இதற்காக சுக்காலியூர் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் பரிசீலிக்கப்பட்டன.

கடந்த 2013ம் ஆண்டு கரூர் மாவட்டம் திருமாநிலையூரில் புதிய பேருந்து நிலைய அறிவிப்பு வெளியிடப்பட்ட நிலையில் வழக்குகளால் பணிகள் தொடங்கப்படவில்லை. கடந்த அதிமுக ஆட்சியில் தோரணக்கல்பட்டியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

புதிய பேருந்து நிலையம் திறப்பு: ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் கரூர் மாவட்டம் திருமாநிலையூரில் 12.14 ஏக்கரில் ரூ.40 கோடியில் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் கடந்த 2022ம் ஆண்டு தொடங்கின. மீண்டும் வழக்குகள் காரணமாக பணிகள் முடங்கின. அதன் பிறகு வழக்குகள் முடிவடைந்த நிலையில் பேருந்து நிலையப் பணிகள் முடிக்கப்பட்டு கடந்த ஜூலை 9ம் தேதி புதிய பேருந்து நிலையத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் ஏலம் விடுதல் உள்ளிட்ட பணிகளால் பேருந்து நிலையம் பயன்பாட்டுக்கு 2 மாதங்களுக்கு மேலான நிலையில் அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் மாநகராட்சி சார்பில் கலந்தாய்வுக் கூட்டம் செப்.20ம் தேதி நடைபெற்றது.

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகளை இயக்குவது தொடர்பாக அனைத்து தமிழக அரசுப் போக்கு வரத்துக் கழக கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம் கோட்டங்கள் மற்றும் கரூர், திருச்சி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல் மண்டலங்கள் அலுவலர்களுக்கு செப்.30ம் தேதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பேருந்து சேவை தொடக்கம்: கரூர் மாவட்டம் திருமாநிலையூர் முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதி புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இன்று (அக்.6ம் தேதி) காலை 6 மணி முதல் பேருந்துகள் சேவை தொடங்கியது. இதனையொட்டி கரூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கரூர் மண்டல நேர காப்பாளர் அலுவலகத்தில் பூஜை நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஆணையர் கே.எம்.சுதா, கரூர் மண்டல பொது மேலாளர் (பொ) டி.சதீஷ் குமார், உதவி பொறியாளர் (போக்குவரத்து) முருகானந்தம் உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்றனர். புதிய பேருந்து நிலையத்தில் உணவு விடுதி, தேநீர் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பேருந்து நிலையத்தின் வெளியே ஆட்டோ ஸ்டாண்ட் செயல்படுகிறது.

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து புறநகர பேருந்துகள் புறப்பட்டுச் செல்கின்றன. வெளியூர்களில் இருந்து புறநகர பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திற்கு வந்தன. துணை மேயர் ப. சரவணன் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து சேவைகள் தொடங்கியதை பார்வையிட்டார்.

பேருந்து வழித் தடங்கள்: கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தாராபுரம், பொள்ளாச்சி மார்க்கத்தில் இருந்து வரும் பேருந்துகள் முத்துகுமார சாமி பேருந்து நிலையம் வழியாக புதிய பேருந்து நிலையத்தை வந்தடைந்து வந்த வழித் தடத்திலேயே திரும்ப செல்ல வேண்டும்.

மதுரை, திண்டுக்கல், பழநி மார்க்கமாக வரும் பேருந்துகள் சுக்காலியூர், செல்லாண்டிபாளையம் வழியாக புதிய பேருந்து நிலையம் வந்து மீண்டும் அதே வழியாக திரும்ப வேண்டும். திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல் (குஜிலியம்பாறை) மார்க்கமாக வரும் பேருந்துகள் திருமாநிலையூர் வழியாக புதிய பேருந்து நிலையத்தை சென்றடைந்து, அதே வழியாக திரும்ப வேண்டும்.

நகரப் பேருந்துகள் முத்துகுமார சாமி பேருந்து நிலையத்தில் இருந்து வழக்கம் போல இயக்கப்படும். மேலும் பொதுமக்கள் வசதிக்காக முத்து குமாரசாமி பேருந்து நிலையத்தில் இருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு 24 மணி நேரமும் நகரப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. புதிய பேருந்து நிலையம் செயல்படுவது தொடர்பான அறிவிப்பு பதாகைகள் கரூர் மாநகராட்சி சார்பில் முத்துகுமார சாமி பேருந்து நிலையம், லைட்ஹவுஸ் முனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளன.

# முறைகேடு கண்டறியப்பட்டால் ஜல்ஜீவன் நிதி நிறுத்தப்படும்: தமிழக அரசுக்கு பாஜக அறிவுறுத்தல்




சென்னை, அக்.07-

ஜல்ஜீவன் திட்டத்தில் முறைகேடு கண்டறியப்பட்டால் நிதி நிறுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளதை தமிழக அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என தமிழக பாஜக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஏ.என். எஸ்.பிரசாத் விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: மத்திய அரசின் நல திட்டங்களை தமிழகத்தில் நிறைவேற்ற நிதியை பெற்றுக் கொண்டு, திட்டங்களை முழுமையாக செயல்படுத்தாமல் நிர்வாக சீர்கேடுகளுக்கு இலக்கணமாக திமுக அரசு விளங்குகிறது. மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 1 கோடியே 12 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தத் திட்டத்தில், தாமதப்படுத்தி பணிகள் செய்யப்பட்டால், ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வேண்டிய நிதியை நிறுத்தி வைக்கும்படி மத்திய பாஜக அரசு அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து தமிழக அரசு போதிய கவனம் செலுத்தாவிட்டால் ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேடுகள் காரணமாக தமிழகத்துக்கு வர வேண்டிய நிதி நிறுத்தப்பட்டு தமிழக மக்கள் பாதிப்படையும் சூழ்நிலை உருவாகும். எனவே, குடிநீர் குழாய் இணைப்பு அளிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு குடிநீர் அளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மத்திய அரசு யாரையும் கன்ட்ரோல் செய்து வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. தமிழக முதல்வர் மத்திய அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில், தமிழகத்தின் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் அக்கறை கொள்ளாமல், தொடர்ந்து மத்திய அரசை குறை சொல்வதும் பிரதமர் மோடியை விமர்சித்து அரசியல் செய்வதும் தான் முதல்வர் பணி என்ற குறிக்கோளில் செயல்படுவது தமிழகத்துக்கு பின்னடைவை ஏற்படுத்தும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தீபாவளி பண்டிகையையொட்டி நாகையில் இருந்து இலங்கைக்கு தினசரி பயணிகள் கப்பல் சேவை

நாகை, அக்.07-

பண்டிகை காலத்தையொட்டி நாகையிலிருந்து இலங்கைக்கு வாரத்தின் 7 நாட்களும் பயணிகள் கப்பல் இயக்கப்படுகிறது என்று தனியார் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு சுபம் கப்பல் நிறுவனம் சார்பில் சிவகங்கை என்ற பெயரில் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டு வருகிறது. வாரத்தில் செவ்வாய்க்கிழமை தவிர 6 நாட்கள் கப்பல் இயக்கப்படுகிறது. இந்நிலையில் பண்டிகை காலத்தையொட்டி வாரத்தில் 7 நாட்களும் கப்பலை இயக்க நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து தனியார் கப்பல் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சுபம் கப்பல் நிறுவனம் சார்பில் நாகை துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது பண்டிகை காலம் என்பதால் இருநாட்டு பயணிகளின் வேண்டுகோளுக்கு இணங்க சிவகங்கை பயணிகள் கப்பல் சேவை அக்டோபர் மாதத்தில் வாரம் முழுவதும் இயக்கப்படவுள்ளது. அதன்படி வரும் 14, 21, 28ம் தேதிகளில் (செவ்வாய்கிழமை) கப்பல் சேவை உண்டு. தீபாவளி பண்டிகையான வரும் 20ம் தேதி கப்பல் சேவை கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணக்கட்டணம்

நாகையிலிருந்து இலங்கை சென்று வர ரூ.8000 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நாகையிலிருந்து இலங்கை செல்ல ரூ.4,500ம், இலங்கையிலிருந்து நாகை வர ரூ.3500 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# தொடர் விடுமுறை முடிந்து சென்னை திரும்பும் மக்கள்: கிளாம்பாக்கம் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல்

சென்னை, அக்.07-

தொடர் விடுமுறை முடிந்து சென்னைக்கு மக்கள் திரும்பி வருவதால் கிளாம்பாக்கம் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, காலாண்டு விடுமுறை என தொடர்ச்சியாக விடுமுறை காரணமாக, சென்னை மக்கள் ஒரு வாரத்துக்கு முன்னாகவே தென்மாவட்டங்களுக்கு சென்றிருந்தனர். விடுமுறை முடிந்து இன்று அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பள்ளிகள் வழக்கம் போல் திறக்கப்பட்டதன் காரணமாக தென்மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள் நேற்று முதலே சென்னை நோக்கி தொடர்ச்சியாக படையெடுத்து வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில், செங்கல்பட்டு அருகே சிங்கபெருமாள் கோயில் அருகே காலை முதலே கடுமையாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கிளாம்பாக்கம் பகுதி, ஊரப்பாக்கம் பகுதி, வண்டலூர் அருகே கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேலாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. திருச்சி, சென்னை தேசிய நெடுஞ்சாலையில் கடுமையாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடுமையாக இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

# கேளிக்கை பூங்காக்களில் நிரந்தர ராட்சத ராட்டினம் இயக்க சுற்றுலாத் துறையிடம் அனுமதி பெற வேண்டும்: தமிழ்நாடு அரசு அரசாணை

சென்னை, அக்.07-

கேளிக்கை பூங்காக்களில் நிரந்தர ராட்சத ராட்டினம் இயக்க சுற்றுலாத் துறையிடம் அனுமதி பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு அரசானை வெளியிட்டுள்ளது. புதிதாக ராட்சத ராட்டினம் அமைப்பவர்கள் சம்பந்தப்பட்ட துறையிடம் ஐ.எஸ்.ஓ. தரச்சான்று பெற வேண்டும். ஏற்கனவே ராட்சத ராட்டினம் அமைத்துள்ளவர்கள் 6 மாதத்துக்குள் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் பெற வேண்டும். தற்காலிகமாக ராட்சத ராட்டினம் இயக்க சம்பந்தப்பட்ட துறைகளிடம் அனுமதி பெற வேண்டும். தீயணைப்புத்துறை, பொதுப்பணித்துறை, நீர்வளத்துறையிடம் அனுமதி பெற வேண்டும். ஆன்லைன் மூலம் அனுமதி பெறுவதற்கான இணையதளம் விரைவில் உருவாக்கப்படும்

# மயிலாப்பூர் கற்பகாம்பாளுக்கு வைரம் பதித்த தங்க மூக்குத்தி அணிவித்தார் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



சென்னை, அக்.07-

காஞ்சி காமகோடி பீடத்தின் 70வது சங்கராச்சாரியாரான ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு சென்று கற்பகாம்பாளுக்கு வைரம் பதித்த தங்க மூக்குத்தியை அணிவித்தார். ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வை கண்டு மகிழ்ந்தனர்.

பின்னர் ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை வழங்குகையில், ஆதிசங்கரரின் திரிபுர சுந்தரி மானச பூஜை ஸ்தோத்திரம் மற்றும் லலிதா சஹஸ்ரநாமம் ஆகியவற்றின் குறிப்புடன், தேவிகளுக்கு அலங்காரம் செய்யும் ஆதிசங்கரர் பாரம்பரியத்தை நினைவு கூர்ந்தார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் திருவானைகோவிலில் அகிலாண்டேஸ்வரிக்கு தாண்டக பிரதிஷ்டை (காது அலங்காரம்) ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளால் வழங்கப்பட்டது. இப்போது மூக்குத்தி வழங்கப்பட்டுள்ளது. 1966 பிப்ரவரி 19ம் தேதியன்று இதே விஸ்வாவசு ஆண்டில் காஞ்சி காமகோடி பீடத்தின் மகாஸ்வாமிகள் கபாலீஸ்வரர் கோயிலுக்கு விஜயம் செய்தபோது, தருமபுரம் ஆதீனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சைவ ஆன்மிக சேவை நிகழ்வான தெய்வீக பேரவையை 68வது சங்கராச்சாரியார் தொடங்கி வைத்தார்.

அந்த நிகழ்வையும் இப்போது அவர் நினைவுகூர்ந்தார். முன்னதாக ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளை இணை ஆணையர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி பி.கே.கவேனிதா மற்றும் கோயில் அறங்காவலர்கள் பாரம்பரிய மரியாதையுடன் வரவேற்றனர்.

# குழந்தைகள் உயிரிழப்புக்கு காரணமான கோல்ட்ரிஃப் இருமல் மருந்துக்கு தடை: உ.பி துணை முதல்வர் அறிவிப்பு



லக்னோ, அக்.07-

குழந்தைகளின் உயிரிழப்புக்கு காரணமான கோல்ட்ரிஃப் இருமல் சிரப்பை பயன்படுத்த உத்தரப் பிரதேச அரசு தடை விதித்துள்ளதாக அம்மாநில துணை முதல்வர் பிரஜேஷ் பதக் அறிவித்தார்.

உ.பி. அரசு கோல்ட்ரிஃப் இருமல் சிரப் விற்பனையைத் தடை செய்துள்ளதாகவும், இந்த வகை இருமல் சிரப்பை மக்கள் உட்கொள்ள வேண்டாம் என்றும் அம்மாநில துணை முதல்வர் பிரஜேஷ் பதக் அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், " இருமல் சிரப்பை உட்கொண்ட பிறகு பல குழந்தைகள் உயிரிழந்திருப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. எங்கள் அரசு இதுபோன்ற இருமல் சிரப்பை ஒருபோதும் வாங்கியதில்லை. இந்த வகை இருமல் சிரப்பை உட்கொள்ள வேண்டாம் என்று மாநில மக்களை வலியுறுத்தும் ஆலோசனையையும் நாங்கள் வெளியிட்டுள்ளோம். மேலும், உ.பி மாநிலத்தில் இருமல் சிரப்பை நாங்கள் தடை செய்துள்ளோம்" என்று கூறினார்.

தமிழ்நாட்டில் ஸ்ரீசன் பார்மாவால் தயாரிக்கப்படும் கோல்ட்ரிஃப் இருமல் சிரப் என்ற சிரப்பில் அனுமதிக் கப்பட்ட வரம்புகளை விட அதிகமாக டைதிலீன் கிளைகோல் (DEG) இருப்பதாக சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்தியதை அடுத்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. டைதிலீன் கிளைகோல் என்பது தொழில்துறையில் பயன்படுத்தப்படும் ஒரு நச்சுப் பொருளாகும், இது சிறிய அளவில் உட்கொண்டாலும் ஆபத்தானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேசத்தின் சிந்த்வாராவில் இருமல் சிரப் உட்கொண்டதாகக் கூறப்படும் காரணத்தால் 14 குழந்தைகள் இறந்துள்ளதாகவும், எட்டு குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அம்மாநில சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, உத்தரகண்ட், ராஜஸ்தான், தெலங்கானா, கேரளா உள்ளிட்ட பல மாநிலங்கள் கோல்ட்ரிஃப் இருமல் சிரப்பை தடை செய்துள்ளன. மேலும், குழந்தைகளின் உயிரிழப்புகள் தொடர்பாக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) பல்வேறு மாநிலங்களில் விசாரணையைத் தொடங்கியுள்ளது.

# அமைச்சர் துரைமுருகன் தாக்கல் செய்த மனுவுக்கு தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, அக்.07-

தனக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கை வேலூர் நீதிமன்றத்தில் இருந்து சென்னை சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றி 2019ம் ஆண்டு பிறப்பித்த அரசாணையை எதிர்த்து அமைச்சர் துரைமுருகன் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்கும்படி, தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006 11ம் ஆண்டுகளில் திமுக ஆட்சி காலத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக பதவி வகித்த துரை முருகன், வருமானத்துக்கு அதிகமாக ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்தது.

வேலூர் நீதிமன்றத்தில் இருந்த இந்த வழக்கை, சென்னையில் உள்ள ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றி 2019ம் ஆண்டு தமிழக அரசு அரசாணை பிறப்பித்து இருந்தது.

இந்நிலையில், தனக்கு எதிரான வழக்கை வேலூர் நீதிமன்றத்தில் இருந்து சென்னை சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றிய அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என துரைமுருகன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், 2017ம் ஆண்டு வழக்கில் இருந்து தன்னை விடுவித்து வேலூர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், 2019ம் ஆண்டு வழக்கு சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கில் இருந்து விடுவித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்ததை அடுத்து, தற்போது இந்த வழக்கை சிறப்பு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி வி.லட்சுமி நாராயணன், தமிழக அரசு அக்டோபர் 23ம் தேதிக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தார்.



■ திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் தலைமையில் மாநகராட்சி மேயர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாநகரின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை மனுக்களை மேயரிடம் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் ஆணையர் லி. மதுபாலன், துணை மேயர் ஜி திவ்யா, மண்டலத் தலைவர்கள் துர்காதேவி, பி.ஜெய நிர்மலா,விஜயலட்சுமி கண்ணன், துணை ஆணையர், நகரப் பொறியாளர், நகர் நல அலுவலர், செயற்பொறியார்கள், உதவி ஆணையர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.



## மதுரை திருப்பரங்குன்றம் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு திட்டங்களின் கீழ் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினார்கள்

மதுரை, அக்.07-

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டம், பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் கைத்தறித்துறை சார்பில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் (410 2025) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு திட்டங்களின் கீழ் கைத்தறி உபகரணங்கள், முதியோர் ஓய்வூதிய திட்டம் ஆகியவற்றின் கீழ் 18 நெசவாளர்களுக்கு ரூபாய் 5 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு செயலாளர் மகேஸ்வரி ரவிக்குமார், கோ. ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதாராமு, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் இ.ஆ.ப., மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், ஆகியோர் உடன் உள்ளனர்.

## திருச்சி குற்றவியல் வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை பரிசோதனை முகாம்

திருச்சி, அக்.07-

குற்றவியல் வழக்கறிஞர் சங்க செயலாளர் பி.வி.வெங்கட் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



திருச்சி குற்றவியல் வழக்கறிஞர் சங்கத்தில் தமிழகத்திலே முதல் முறையாக துளசி பார்மசியுடன் உடன் இணைந்து இனி வரும் காலங்களில் அனைத்து மாதங்களிலும் முதல் வாரத்தில் கட்டாயமாக இலவசமாக ஙிறி மற்றும் ஷிஹிநிகிஸி பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்கும் முகாம் சென்ற வருடம் 2024 நவம்பர் மாதம் மாண்புமிகு நீதிபதிகளால் தொடங்கி வைக்கப்பட்டன அதன் தொடர்ச்சியாக பதினொன்றாம் மாத (ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவு) பரிசோதனை முகாம் மேலும் எடை பார்க்கும் மெஷின் கொண்டு வரப்படும் அனைவரும் மாதாந்திர தோறும் எடையையும் சரிபார்த்துக் கொள்ளலாம் வருகிற 8ந்தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு தொடங்கி மதியம் 1 மணி வரை குற்ற வியல் வழக்கறிஞர் சங்கத்தில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம் இம் முகாமில் வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் .

## புதுக்கோட்டை மாவட்டத்தின் வல்லநாடு கண்மாயில் தூர்வாரும் பணிகள்: கண்மாய் முழுவதும் நிறைந்துள்ள கருவேல மரங்களை அகற்ற கோரிக்கை

புதுக்கோட்டை, அக்.07-



புதுக்கோட்டை மாவட்டம் வல்லநாடு கண்மாயில் தூர்வாரும் பணிக்கு இடையூறாக இருக்கும் உயரழுத்த மின்கம்பிகள் செல்லும் 15 மின்கம்பங்களை அகற்றி மாற்றுப்பாதையில் அமைக்க கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடையக்குடி தொடங்கி வல்லத்திராக்கோட்டை வரை சுமார் 1600 ஏக்கர் பரப்பளவில் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைந்துள்ள வல்லநாடு கண்மாய், புதுக்கோட்டை மாவட்டத்தின் பெரிய கண்மாயாக திகழ்ந்து வருகிறது. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கண்மாய் மூலம் பூவரசகுடி, மணியம்பள்ளம், வாண்டாக்கோட்டை உட்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இந்த நிலையில், வல்லநாடு கண்மாயில் அரை நூற்றாண்டுகளுக்கு பிறகு உயர் நீதிமன்றம் நீதிபதி சுரேஷ் குமார் அறிவுறுத்தலின் பேரில் 10 கிராம மக்களின் முயற்சியில் தூர்வாரும் பணியும், கரைகளை பலப்படுத்தும் பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளுக்கு இடையூறாக உள்ள கண்மாய் கரைகளில் உள்ள 15 மின்கம்பங்களை வேறு இடத்துக்கு மாற்ற மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். கண்மாய் முழுவதும் நிறைந்துள்ள கருவேல மரங்களை அகற்றவும். புதுக்கோட்டை மாநகராட்சி கழிவு நீர் கண்மாயில் கலக்காமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முதலமைச்சர் கோப்பை: கால்பந்து போட்டியில் முதலிடம் பிடித்த கோவை அணிக்கு ரூ.13.5 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார் அமைச்சர் சேகர்பாபு

சென்னை, அக்.07-



முதலமைச்சர் கோப்பை 2025 மாவட்ட அளவிலான கால்பந்து போட்டியில் முதலிடம் பிடித்த கோவை அணிக்கு ரூ.13.5 லட்சத்திற்கான காசோலையை அமைச்சர் சேகர்பாபு வழங்கினார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடத்தப்படும் முதலமைச்சர் கோப்பை 2025 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கடந்த ஆகஸ்ட் 25ம் தேதி அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைப் போட்டியில் மாவட்ட அளவிலான போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் உள்ளிட்ட 16,28,338 பேர் இணையதளத்தின் மூலம் முன்பதிவு செய்து, 5 பிரிவுகளில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, இப்போது மாநில அளவிலான போட்டிகள் அக்டோபர் 2 ஆம் தேதி 2025 முதல் 14 ஆம் தேதி 2025 வரை 5 பிரிவுகளில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகள் சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு முதலிய 13 நகரங்களில் மாவட்ட மற்றும் மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 30,136 வீரர்களுக்கு நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கால்பந்து போட்டியில் கோவை மாவட்டம் முதலிடத்தையும், செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாம் இடத்தையும், கன்னியாகுமரி மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக ரூ. 13.5 லட்சத்திற்கான காசோலையும், இரண்டாம் பரிசாக ரூ.9 லட்சத்திற்கான காசோலையும், மூன்றாம் பரிசாக ரூ. 4.5 லட்சத்திற்கான காசோலை மற்றும் சான்றிதழ்களை இன்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கி, பாராட்டினார். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் எல். சுஜாதா, துணை பொது மேலாளர் நோயலின் ஜான், நேரு விளையாட்டரங்க அலுவலர் பி. வெங்கடேஷ் உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளனர்.

## ஆர்.டி.இ. சட்டத்தின் கீழ் மாணவர் சேர்க்கைக்கு பள்ளிகள் வாயிலாகவே விண்ணப்பிக்க முடியும்

### பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு

சென்னை, அக்.07-

ஆர்.டி.இ. சட்டத்தின் கீழ் மாணவர் சேர்க்கைக்கு பள்ளிகள் வாயிலாகவே விண்ணப்பிக்க முடியும் என பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது. ஒன்றிய அரசின் அனைவருக்கும் கட்டாய கல்வி திருத்தச் சட்டம் எனப்படும் RTEன் படி, தனியார் பள்ளிகளில் 25 சதவீத ஒதுக்கீட்டின் கீழ் மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்படுகிறது. அதாவது இந்த கல்விக்கான கட்டணத்தை அரசே செலுத்தி விடும்.

வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளை இச்சட்டத்தின் மூலம் தனியார் மெட்ரிக் பள்ளிகளில் சேர்க்கலாம். இதற்கு நலிந்த பிரிவினரின் ஆண்டு வருமானம் 2 லட்ச ரூபாய்க்கும் குறைவாக இருக்க வேண்டும். இதன்மூலம் குழந்தைகள் எல்.கே.ஜி. முதல் முதல் 8ஆம் வகுப்பு வரை எந்தவித கட்டணமும் இல்லாமல் தனியார் பள்ளிகளில் பயில முடியும். இதற்காக எல்.கே.ஜி அல்லது ஒன்றாம் வகுப்பு சேர்க்கைக்கு இடம் ஒதுக்கப்படும்.

இந்த நிலையில், தற்போது மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு தொடங்கியுள்ளது. ஆர்.டி.இ. சட்டத்தின் கீழ் மாணவர் சேர்க்கைக்கு பள்ளிகள் வாயிலாகவே விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இணையதளம் வாயிலாக ஆர்.டி.இ. மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க முடியாது. பள்ளிகளுக்கு நேரடியாக சென்று மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது. விண்ணப்பிக்கும் பொழுது குழந்தையின் பிறப்புச் சான்றிதழ், ஆதார் அட்டை, வருமான, இருப்பிட சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, பெற்றோர் தங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள பள்ளியில், மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரூரில் நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு விசிக சார்பில் தலா ரூ.50,000 வழங்கவுள்ளோம்

### விசிக தலைவர் திருமாவளவன்

சென்னை, அக்.07-

கரூரில் நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு விசிக சார்பில் தலா ரூ.50,000 வழங்கவுள்ளோம் என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். 'கரூர் சம்பவத்தில் பாஜக, ஆர்.எஸ்.எஸ். அரசியல் ஆதாயம் தேடுகின்றன. கரூர் நெரிசல் சம்பவத்தில் எடப்பாடி பழனிசாமியும் அரசியல் செய்கிறார்' என திருமாவளவன் தெரிவித்துள்ளார். மேலும் ஆளுநர் ஆர்.என்.ரவி அதிகார வரம்புகளை மீறி வருகிறார் எனவும் ஆளுநருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சரியான பதிலடி கொடுத்து வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'ட்ரோன் பைலட்' ஆன இந்தியாவின் முதல் திருநங்கை ஷிவானி

புதுக்கோட்டை, அக்.07-

ட்ரோன் பைலட் பயிற்சி பெற்று நாட்டின் முதல் தொழில் முனையும் திருங்கையானார் புதுக்கோட்டை ஷிவானி. புதுக்கோட்டையைச் சேர்ந்தவர் ஆர்.ஷிவானி. திருநங்கை. பட்டதாரியான இவர், திருநங்கைகள் நலச் சங்கத்தின் செயலாளராக உள்ளார். கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள ரிமோட் ட்ரோன் பைலட் சென்டர் மூலம் நபார்டு வங்கியின் நிதி உதவியின் கீழ் ட்ரோன் பைலட் பயிற்சியை ஷிவானி அண்மையில் முடித்தார்.

அதன் பிறகு, தமிழக அரசின் புத்தொழில் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க பதிவு செய்தார். அதன் அடிப்படையில் தமிழக அரசின் நிதி உதவி ரூ.5 லட்சம் வழங்குவதற்கான தொழில் முனைவோராக சிவானி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து புதுக்கோட்டை நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலர் ஆர்.தீபக்குமார் கூறியதாவது: துல்லியமான வேளாண்மை, பயிர் கண்காணிப்பு, உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை குறித்த இடத்தில் தெளிப்பதற்கு ட்ரோன் அவசியமாகி உள்ளது.

ட்ரோன் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு ரசாயன அபாயம் நீங்குகிறது. வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரழிவுகளுக்குப் பின் பயிர்க் காப்பீடு மதிப்பீட்டிலும் ட்ரோன்கள் முக்கிய பங்காற்றுகின்றன. தற்போது ட்ரோன் பயன்பாடு அதிகரித்துள்ளது. எனினும், திருநங்கை ஒருவர் இத்தொழிலை தொடங்குவது இந்தியாவில் இதுதான் முதன்முறை. ஷிவானிக்கு தேவையான ட்ரோன் தொழில்நுட்ப ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்படும் என்றார்.



## அருப்புக்கோட்டை அருகே பலத்த காற்றுடன் கனமழை: பெரும்பாலான வாழை மரங்கள் குலை தள்ளி இருந்தன

விருதுநகர், அக்.07-

அருப்புக்கோட்டை அருகே பலத்த காற்றுடன் பெய்த கனமழை காரணமாக 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சாய்ந்ததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே சிதம்பராபுரம் கிராமத்தில் சுமார் 1000ஏக்கருக்கு மேலாக வாழை மரங்கள் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், அருப்புக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று மாலை காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. இதில் பெரும்பாலான வாழை மரங்கள் குலை தள்ளிய நிலையில், அப்படியே சாய்ந்து அனைத்தும் நாசம் அடைந்தது. வாழை குலைகள் பிஞ்சாக இருப்பதால், இதனால் எந்த பயனும் இல்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஏக்கருக்கு லட்சக் கணக்கில் செலவு செய்த நிலையில், காற்றுடன் பெய்த கனமழையினால் மிகவும் நஷ்டம் அடைந்ததாகவும் அரசு தங்களுக்கு உதவ வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு இதேபோல் சூறாவளி காற்றின் காரணமாக வாழை மரம் சாய்ந்ததில் எந்தவித நிவாரணம் வழங்கவில்லை எனவும் ஏற்கனவே மிகுந்த நஷ்டத்தில் உள்ள தங்களுக்கு இந்த சம்பவம் வேதனை அளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த முறையாவது அரசாங்கம் தங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் ஒரு வருடம் நடைபெறும் விவசாயத்தில் அறுவடை வரும் பொழுது வாழை மரங்கள் சாய்ந்ததால் தங்கள் உழைப்பு வீணாகிவிடும் என்று கண்ணீருடன் தெரிவித்தனர். இதேபோல் சிதம்பராபுரத்தில் நேற்று வீசிய பலத்த காற்று காரணமாக பல இடங்களில் மரங்கள் சாய்ந்து விழுந்ததில் மின்கம்பங்களும் சாய்ந்து விழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் தீ: பெட்டியில் இருந்து குதித்த பயணிகள்

அரக்கோணம், அக்.07-

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் இருந்து சென்னை செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் மாலை திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்டது. இந்த ரயில் அரக்கோணம் அடுத்த மேல்பாக்கம் அருகே நேற்று காலை 8:26 மணிக்கு ரயில் வந்தது. அப்போது, ஏசி பெட்டியின் கீழ் பகுதியில் தீப்பொறியுடன், அதிகளவு புகை கிளம்பியது. இதனை பார்த்த மேல்பாக்கம் பகுதியில் பணியில் இருந்த ரயில்வே அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், உடனடியாக அரக்கோணம் ரயில் நிலைய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனால், திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரயில் நடுவழியில் நிறுத்தப்பட்டது. திடீரென ரயில் நிறுத்தப்பட்ட நிலையில் ஏசி பெட்டியில் இருந்து புகை, தீப்பொறி கிளம்பி அங்கு புகை மண்டலமாக காணபட்டது. இதை அறிந்த பயணிகள், அதிர்ச்சிக்குள்ளாகி அலறியடித்தபடியே ரயிலில் இருந்து கீழே குதித்தனர்.

தொடர்ந்து ரயில்வே ஊழியர்கள் தீயணைப்பு கருவியுடன் வந்து, ஏசி பெட்டியின் அடியில் ஏற்பட்ட தீயை நீண்ட நேரம் போராடி அணைத்தனர். இதையடுத்து அரை மணி நேர தாமதத்திற்கு பின் காலை 9 மணியளவில் ரயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது. எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏற்பட்ட தீ உடனே கண்டறியப்பட்டதால், பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. விபத்துகுறித்து ரயில்வே அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமதாஸ் ஐசியுவில் உள்ளதால் அவரை பார்க்க முடியவில்லை: மருத்துமனையில் அன்புமணி பேட்டி



சென்னை, அக்.07-

சென்னையில் உள்ள தனியார் மருத்துமனையில் பாமக நிறுவனர் ராமதாஸ் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரின் மகனும், பாமக தலைவருமான அன்புமணி மருத்துவமனைக்கு நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

இதயம் தொடர்பான பரிசோதனைக்காக சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் ராமதாஸ் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இன்று ஆஞ்சியோகிராம் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாமக தலைவர் அன்புமணி மருத்துவமனைக்கு நேரில் சென்று ராமதாஸின் உடல்நலம் குறித்து விசாரித்தார். மேலும், அவருக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி, "நேற்று மாலை மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார். ராமதாஸுக்கு ஆஞ்சியோகிராம் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது, இதயத்துக்கு செல்லும் ரத்துக்குழாய்கள் நன்றாக உள்ளன. பயப்படும்படி அவருக்கு எந்த பிரச்சினையும் இல்லை என இதய சிகிச்சை மருத்துவர்கள் தெரிவித்தனர். அவர் 2 நாட்கள் மருத்துவமனையில் ஓய்வு எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து சாப்பிடும் மாத்திரைகளை எடுக்க வேண்டும் என சொல்லியுள்ளனர். அவர் ஐசியுவில் இருப்பதால் பார்க்க முடியவில்லை. 6 மணி நேரம் ஐசியுவில் இருப்பார் அதன்பின்னர் சாதாரண அறைக்கு மாற்றப்படுவார். மருத்துவர்களிடம் பேசி விவரங்களை கேட்டறிந்தேன்'' என்றார்.

ராமதாஸ் மற்றும் அன்புமணி இடையே ஏற்பட்ட மோதலால் பாமகவில் கடந்த சில மாதங்களாக குழப்பமான சூழல் நிலவி வருகிறது. இரண்டு வாரங்களுக்கு முன்பு அன்புமணியை கட்சியில் இருந்து நீக்குவதாக ராமதாஸ் அறிவித்தார். மேலும், அன்புமணி ஆதரவாளர்களை கட்சியிலிருந்து நீக்கியும், தனது ஆதரவாளர்களை பொறுப்பாளர்களாக நியமித்தும் தொடர்ந்து அறிவிப்புகளை வெளியிட்டு வந்தார் ராமதாஸ்.

அதேபோல, ராமதாஸின் ஆதரவாளர்களை நீக்கியும், தனது ஆதரவாளர்களை பொறுப்புகளில் நியமித்தும் அன்புமணியும் பதிலடி கொடுத்து வந்தார். இந்த சூழலில், தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ராமதாஸை, அன்புமணி நேரில் சென்று நலம் விசாரித்தது பாமக வட்டாரத்தில் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

# தீர்ப்பு வழங்கியதற்காகவே மோசமாக விமர்சிக்கின்றனர்: உயர்நீதிமன்ற நீதிபதி



சென்னை, அக்.07-

வழக்குகளில் தீர்ப்பு வழங்கியதற்காக நீதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் பின்புலம் குறித்து சமூக வளைதளத்தில் மோசமாக விமர்சிக்கப்படுவதாக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என்.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

யூடியூப் மற்றும் சமூக வளைதளங்களில் கிறிஸ்டில்லா பதிவிட்ட வீடியோ மற்றும் கருத்துக்களை நீக்கக்கோரி சமையல் கலை நிபுணர் மாதம்பட்டி ரங்கராஜன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில், 'ஆடை வடிவமைப்பாளர் கிறிஸ்டில்லா, தனக்கும் அவருக்கும் தொடர்பு இருப்பதாக யூடியூப் மற்றும் சமூக வளைதளங்களில் பதிவிட்டுள்ளார். இதனால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. அதனால், அவரது கருத்துக்களை யூடியூப்களில் இருந்து நீக்க உத்தரவிட வேண்டும்' என குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி என்.செந்தில்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மாதம்பட்டி ரங்கராஜன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், "சமையல் கலை நிபுணர் ரங்கராஜன், ஸ்ருதி என்பவரை கடந்த 2013ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரு மகன்கள் உள்ளனர். தொழிலில் வளர்ச்சியடைந்த நிலையில் ஆடை வடிவமைப்பாளரான கிறிஸ்டில்லாவுடன் தொழில் ரீதியாக பழக்கம் ஏற்பட்டது. பின்னர் இருவருக்கும் தொழிலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கிறிஸ்டில்லாவுக்கு கோபம் ஏற்பட்டது.

இதையடுத்து தன்னை ஏமாற்றி விட்டதாகவும், மோசம் செய்து விட்டதாகவும் கிறிஸ்டில்லா பேட்டி மற்றும் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதனால், சமூகத்தில் ரங்கராஜனுக்கு இருந்த நற்பெயருக்கு கலங்கம் ஏற்பட்டுள்ளது. தொழிலில் ஏற்பட்ட இழப்பு தொடர்பாகவும் தனியாக வழக்கு தொடரப்பட்டு நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் உள்ளது'' என்று வழக்கறிஞர் வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி செந்தில்குமார், "ஒரு வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப் படுவதற்காக நீதிபதிகள் சமூக வலைதளத்தில் விமர்சிக்கப்படுகின்றனர். அவர்களின் செயல்பாடுகளுக்கு கலர் சாயம் பூசப்படுகிறது. குடும்பத்தினர் மற்றும் பின்புலங்கள் விமர்சிக்கப்படுகிறது.

சமூக வளைதளங்களில் அவர்களுக்குத் தேவையானதை எழுதுவார்கள். அதை நாம் கவனத்தில் கொள்ளாமல் புறக்கணிக்க வேண்டும். சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வருபவர்கள் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படுவது இயல்பானது.

கிறிஸ்டில்லா குற்றச்சாட்டு குறித்து மாதம்பட்டி ரங்கராஜன் ஆதாரங்களுடன் மறுக்க முடியுமா? அனைத்துக்கும் ஆதாரங்கள் உள்ளதா? தொடர்புக்கான காரணங்களை மறுக்க முடியுமா? என கேள்வி எழுப்பிய நீதிபதி, கிறிஸ்டில்லா தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை அக்.22ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.



# வெள்ள மீட்பு பணிக்கு உதவிய இந்தியாவுக்கு பூடான் நன்றி

புதுடெல்லி, அக்.07-

பூடானில் கனமழை காரணமாக அமோசு ஆற்றில் நேற்று அதிகாலை திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதில் ஆற்றங் கரையில் தங்கியிருந்த சிலரை உள்ளூர் மீட்புக் குழுவினர் உடனடியாக மீட்டனர். ஆற்றங்கரைக்கு வெகு தூரத்தில் சிக்கியிருந்த 4 ஊழியர்களை மீட்க முடியவில்லை. இதில் 2 பேர் காணாமல் போய்விட்டதாக முதலில் தகவல் பரவியது. மோசமான வானிலை காரணமாக பூடான் அரசால், ஊழியர்களை மீட்க ஹெலிகாப்டரை அனுப்ப முடியவில்லை.

இதையடுத்து பூடான் ராணுவத்தினர், இந்திய ராணுவத்தை தொடர்பு கொண்டு உதவி கேட்டனர். இதையடுத்து இந்திய ராணுவத்தினர் 2 ஹெலிகாப்டர்களில் உடனடியாக விரைந்து சென்று வெள்ளத்தில் சிக்கிய ஊழியர்கள் இருவரை மீட்டனர். காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட இருவரையும் பூடான் ஹெலிகாப்டர் பின்னர் மீட்டது. சரியான நேரத்தில் ஹெலிகாப்டர்கள் அனுப்பி உதவி செய்த இந்திய ராணுவத்தினருக்கு ராயல் பூடான் அரசு நன்றி தெரிவித்துள்ளது.



# அண்ணாமலையார் கோயிலில் கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது: உயர் நீதிமன்ற நீதிபதிகள் திட்டவட்டம்

திருவண்ணாமலை, அக்.07-

அண்ணாமலையார் கோயிலில் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் முன்பாக கோயில் நிதியில் வணிக வளாகம் கட்டுவதை எதிர்த்து ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவரான மயிலாப்பூர் டி.ஆர்.ரமேஷ் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகள் தொடர்பாக விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுரேஷ் குமார், எஸ்.சவுந்தர்குமார் ஆகியோர், கோயிலுக்குள் எந்த கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என இடைக் காலத் தடை விதித்து, விசாரணையை அக். 16ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளனர்.

இந்நிலையில், நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், எஸ்.சவுந்தர் ஆகியோர் திருவண்ணாமலைக்கு நேற்று சென்று, அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் முன்பு, அம்மனி அம்மன் கோபுரம் அருகே நடைபெறும் கட்டுமான பணி, கோயில் வளாகத்துக்குள் உள்ள விருந்தினர் இல்லங்களை ஆய்வு செய்தனர்.

பின்னர், கோசாலை பகுதியில் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்து, "கோயில் வளாகத்துக்குள் நிரந்தர கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது. காத்திருப்பு அறையை போதிய காற்றோட்டத்துடன், மேல் பகுதியில் சீட் அமைத்து, குடிநீர் வசதியுடன் ஏற்படுத்திக் கொடுங்கள். பெரிய கட்டிடம் தேவை இல்லை.

கோயில் வளாகத்துக்குள் கழிப்பறைகள் கட்டக் கூடாது. கோயில் சுவரை எக்காரணத்தைக் கொண்டும் சேதப்படுத்திவிடக் கூடாது. இதுபோன்ற கோயிலை தற்போது அரசாங்கத்தால் கட்ட முடியுமா?'' என்று அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

மேலும்,பிரசாதக் கடை கட்டுவதற்காக வைத்திருந்த திட்டத்தைப் பார்வையிட்ட நீதிபதிகள், கோயிலுக்குள் எந்தக் கட்டிடமும் கட்ட கூடாது என்று உத்தரவிட்டனர். ஆய்வின் போது, ஆட்சியர் கா.தர்ப்பகராஜ், மாவட்ட நீதிபதி மதுசூதனன், எஸ்.பி. எம். சுதாகர், அறநிலையத் துறை இணை ஆணையர் பரணிதரன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

# நீண்ட காலமாக உரிமை கோரப்படாமல் இருக்கும் ரூ.1.84 லட்சம் கோடியை உரியவர்களிடம் ஒப்படைக்க முடிவு



அகமதாபாத், அக்.07-

குஜராத் மாநிலம் காந்திநகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், உங்கள் பணம், உங்கள் உரிமை' என்ற தலைப்பில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது நாடு முழுவதும் வங்கிகள், ரிசர்வ வங்கி, காப்பீட்டு நிறுவனங்கள், மியூச்சுவல் பண்ட்கள், ப்ராவிடென்ட் பண்ட் கணக்குகள் மற்றும் இதர நிறுவனங்களில் ரூ.1.84 லட்சம் கோடி நீண்டகாலமாக உரிமை கோரப்படாமல் உள்ளது. இந்த தொகை அரசின் சொத்து அல்ல, அவை தனி நபர்களுக்கும் குடும்பங்களுக்கும் சொந்தமானவை. இந்த தொகைக்கான உரிமையாளர்களை கண்டுபிடித்து அவர்களிடம் திருப்பித் தர வேண்டும்.

உரிமை கோரப்படாத பணத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் பல ஆண்டுகளாக முன்வைத்து வருகின்றனர். இது அவர்களுடைய பணம். உரிய ஆவணங்கள் இல்லாமை, மறந்த காப்பீட்டு திட்டங்கள் அல்லது விழிப்புணர்வு இல்லாமை ஆகிய காரணங்களால் உரிமை கோரப்படாத தொகை அதிகரித்து வருகிறது. இந்நிலையில், உரிமை கோரப் படாத தொகையை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நோக்கத் துடன், உங்கள் பணம், உங் கள் உரிமை' என்ற தலைப்பில் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்படுகிறது. 3 மாதங்களுக்கு நடைபெறம் இந்த பிரச் சாரம், விழிப்புணர்வு, அணுகல் மற்றும் நடவடிக்கை ஆகிய 3 தூண்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

உரிமை கோரப்படாத பணம் குறித்து மக்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்துவது, ரிசர்வ் வங்கியின் யுடிஜிஏஎம் தளத் தின் மூலம் உரிமை கோரப்ப டாத பணம் பற்றி தேட வழி வகை செய்தல் மற்றும் உரிமை யாளர்கள் ஏதாவது ஓர் ஆதாரத்தை குறிப்பிட்டால்கூட அவர்களுடைய பணத்தை திருப்பித் தர அதிகாரிகள் முன்வருதல் ஆகியவைதான் இந்த பிரச்சா ரத்தின் நோக்கம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# வெளிநாட்டுப் பயணிகளுக்காக இ-அரைவல் புதிய கார்டு

புதுடெல்லி, அக்.07-

இந்தியா வரும் வெளிநாட்டுப் பயணிகள், குடியேற்றப் பிரிவு சம்பிரதாய முறைகளை எளி தாகவும், வேகமாகவும் முடிப் பதற்கு வசதியாக இஅரைவல் கார்டு அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.

கடந்த 1ம் தேதி முதல் இது அறிமுகம் செய்யப்பட் டுள்ளதாக மத்திய அரசு தெரி வித்துள்ளது. இந்தியாவுக்குள் எளிதாக நுழைவதற்கு வசதி யாக இந்த அட்டையை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சம் சார்பில் அறிமுகம் செய்யப்பட் டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த இஅரைவல் அட்டை தேவைப்படுபவர்கள் இந்திய குடியேற்றப் பிரிவு சார்பில் ஏற் படுத்தப்பட்டுள்ள இணையதளம் வழியாகவும், சுசுவாகதம் என்ற

செல்போன் செயலி வழியாக வும், இந்திய விசா ஆன் லைன் இணையதளம் வழியாகவும் விண்ணப்பிக்கலாம்.

தங்களது விமானம் வெளி நாட்டிலிருந்து புறப்படுவதற்கு 24 மணி நேரம் முதல் 72 மணி நேரத்துக்குள்ளாக விண்ணப் பிக்க வேண்டும். அதே நேரத் தில் இது விசா கிடையாது. சுற் றுலா, வணிகம், படிப்புக்காக வரும் வெளிநாட்டுப் பயணிகள் கண்டிப்பாக விசா வைத்திருக்க வேண்டும். இந்த இஅரைவல் அட்டை என்பது, நாம் இந் தியா வருவதற்கு முன்னதாக தேவைப்படும் ஒரு அனுமதிச் சீட்டு மட்டுமே என்பதை பயணி கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.

# தமிழக அரசு ஊழியர்களுக்கு 20 சதவீத தீபாவளி போனஸ் வழங்கப்படும் என அறிவிப்பு

சென்னை, அக்.07-

தமிழக அரசு ஊழியர்களுக்கு 20 சதவீத தீபாவளி போனஸ் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு தொழிலாளர்களுக்கு 20% போனஸ் வழங்கப்படும். 20% மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும். 8.33% மிகை ஊதியம் மற்றும் 11.67% கருணைத் தொகை வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# இந்தோனேசியா: பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 50ஐ கடந்தது



சிடோர்ஜோ, அக்.07-

கடந்த திங்கட்கிழமை (செப்டம்பர் 29) இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50ஐ தாண்டியுள்ளது.

இந்தோனேஷியா நாட்டின் கிழக்கு ஜாவா மாகாணத்தின் நகரமான சிடோர்ஜோவில் உள்ள அல் கோசினி இஸ்லாமிய உறைவிடப் பள்ளிக் கட்டிடம் கடந்த திங்கட்கிழமை (செப்டம்பர் 29) அன்று இடிந்து விழுந்தது. இந்த கட்டிட இடிபாடுகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் சிக்கினர்.

இதனை தொடர்ந்து ஒரு வார காலமாக மீட்புப் படையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று வரை (அக்டோபர்5) 80% இடிபாடுகளை அகற்றி, பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களின் உடல்கள் மற்றும் உடல் பாகங்களை மீட்டதாக பேரிடர் மீட்பு நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட உடல்களின் அடிப்படையில் இதுவரை மொத்தம் 50 பேர் இறந்துவிட்டதாகவும், 4 பேரின் உடல் பாகங்கள் கிடைத்துள்ளதால் பலி எண்ணிக்கை 54 ஆக உயரும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், இடிபாடுகளில் சிக்கிய 13 பேரைத் தேடும் பணி இன்று (அக்டோபர் 6) முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் பேரிடர் மீட்பு அமைப்பின் துணை அதிகாரி புடி இரவான் தெரிவித்தார். அல் கோசினி பள்ளியின் அடித்தளத்தால் தாங்க முடியாத அளவுக்கு, மேல் தளங்களில் கட்டுமானப் பணிகள் நடந்ததே இடிந்து விழுந்ததற்கான காரணம் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியா முழுவதும் சுமார் 42,000 இஸ்லாமிய பள்ளி கட்டிடங்கள் உள்ளன என்று அந்நாட்டின் மத விவகார அமைச்சகத்தின் தரவு காட்டுகிறது. அதில் 50 பள்ளிகளுக்கு மட்டுமே கட்டிட அனுமதிகள் உள்ளன என்று நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் டோடி ஹாங்கோடோ தெரிவித்தார். விபத்து நடந்த அல் கோசினி பள்ளிக்கு கட்டிட அனுமதி இருந்ததா என்பது தொடர்பான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

# முதுநிலை பட்டதாரி ஆசிரியர் தேர்வை ஒத்திவையுங்கள்: அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, அக்.07-

தேர்வர்களின் நலன் கருதி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வை தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் ஒத்திவைக்க வேண்டும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வை ஒத்திவைக்க வேண்டும் என்று தேர்வர்கள் தரப்பிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றை புறந்தள்ளிவிட்டு திட்டமிட்டு அக்டோபர் 12ல் எழுத்துத் தேர்வு நடத்தப்படும் என்று தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்திருக்கிறது. தேர்வர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணராமல் தேர்வு வாரியம் பிடிவாதம் பிடிப்பது கண்டிக்கத்தக்கது.

முதுநிலை பட்டதாரி ஆசிரியர் தேர்வை ஒத்திவைக்க வேண்டும் என்ற தேர்வர்களின் கோரிக்கை மிகவும் நியாயமானது. அத்தேர்வுக்கான பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதால், அத்தேர்வை தாங்கள் எதிர்கொள்வதற்கு தயாராக கூடுதல் கால அவகாசம் தேவைப்படுவதாகக் கூறித்தான் தேர்வை ஒத்திவைக்க வேண்டும் என்று தேர்வர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இது குறித்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றமும் அக்டோபர் 12ஆம் தேதி நடைபெறவுள்ள போட்டித் தேர்வை ஒத்திவைப்பது குறித்து தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் பரிசீலிக்க வேண்டும் என்று ஆணையிட்டது. ஆனால், எதையும் மதிக்காத தேர்வு வாரியம் திட்டமிட்டபடி தேர்வு நடைபெறும் என்று அறிவித்துள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கும் எந்த போட்டித் தேர்வும் குறித்த தேதியில் நடைபெறுவதில்லை. ஆசிரியர் தகுதித்தேர்வுகளும், கல்லூரி உதவிப் பேராசியர் பணிக்கு தகுதி பெறுவதற்கான மாநிலத் தகுதித் தேர்வும் பல மாதங்கள் தாமதமாகத்தான் நடத்தப்பட்டன. கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் 4 ஆயிரம் பேரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு ஒத்திவைக்க ப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் இதுவரை நடத்தப்படவில்லை. அவ்வாறு இருக்கும் போது முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கானத் தேர்வை சில வாரங்கள் ஒத்திவைப்பதால் எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது.

எனவே, தேர்வர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வரும் 12ஆம் தேதி நடைபெறவுள்ள போட்டித் தேர்வை குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்க வேண்டும். தேர்வுகளில் விடைத்தாள்கள் மாறுவதைத் தவிர்க்க ஓ.எம்.ஆர் விடைத்தாள்களின் நகல்கள் தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டும்; அது சாத்தியமில்லை என்றால், 2019 மற்றும் 2022 ஆண்டுகளில் நடைபெற்றது போல CBT (Computer Based Test) முறையில் இத்தேர்வை நடத்த வேண்டும். இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000